# நன்னூல்
# சொல்லதிகாரம் (சொல்லிலக்கணம்)

✷ சொற்களின் இலக்கணத்தை உணர்த்தும் அதிகாரம் சொல்லதிகாரம் எனப்படும். சொற்கள் பல வகைப்படும். அவை பெயர்ச்சொல், வினைசொல், இடைச்சொல், உரிச்சொல், திசைச் சொல், வடசொல், இயற்சொல், திரிசொல் என்ப. இவ்வதிகாரத்தில் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து இயல்கள் உள்ளன. அதிகாரம் - பெரும்பிரிவு.

## 1. பெயரியல்

✷ பெயர்ச்சொல்லின் இலக்கணத்தை உணர்த்தும் இயல்

### கடவுள் வணக்கமும் அதிகாரமும்

**258. முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை**
**அச்சுதன் அடிதொழுது அறைகுவன் சொல்லே**

**மதுரை:**

✷ மூன்று உலகத்திற்கும் நிழலைச் செய்யும் நிறைமதி போன்ற மூன்று குடைகளை உடைய அழியாத அருகக் கடவுளின் அடிகளை வணங்கி எழுத்தினால் ஆகிய சொல்லின் இலக்கணத்தினைச் சொல்லுவேன்.

**விளக்கவுரை:**

✷ ஏகாரம் ஈற்றசை, முக்குடை – சந்திராதித்தியம், நித்திய விநோதம், சகலபாசனம் என்பன. இவை ஒன்றன் மேல் ஒன்றாக அமைந்தன என்பர். சொல் என்பது சொல்லிலக்கணத்தை உணர்த்தும்; எனவே ஆகுபெயர்.

## சொல்லின் பொதுவிலக்கணம்

**259. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா**
**இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்**
**மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்**
**வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.**

**கருத்துரை:**

✷ சொல் ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என வகைப்படும்; இரு திணைகளையும் அவற்றுள் அடங்கிய ஐந்து பால்களையும் உணர்த்தும்; அவ் ஐம்பாற் பொருள்களையும் தன்னையும் உணர்த்தும்; மூவகை இடங்களிலும் வரும்; வழக்கிலும் செய்யுளிலும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளை விளக்கும்.

**விளக்கவுரை:**

✷ இருதிணை – உயர்திணை, அஃறிணை; ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், ஐம்பாற் பொருளை விளக்குதலாவது தான் இன்ன திணை, இன்ன பால் என்று பொருள்களை உணர்த்துதல், தன்னை விளக்குதலாவது தான் பெயர்ச்சொல்லா வினைச்சொல்லா என்பது போல, இன்ன சொல் என்பதனை உணர்த்துதல். இரும்பு, ஆயுதங்கள் செய்வதற்கு மூலமாக அமையும்; அத்துடன் தானே ஓர் ஆய்தமாகவும் இருக்கும். அது போல் சொல் தனக்குவேறான பொருள்களை உணர்த்தும். அத்துடன் தன்னையும் உணர்த்தும். அவன் என்பது உயர்திணை ஆண்பால் பொருளை உணர்த்தும்; மேலும் அவன் என்பது ஒரு பெயர்ச்சொல் என்று தன்னையும் உணர்த்தும் வழக்கு – உலக வழக்கு.

## மூவகை மொழிகள்

260. ஒருமொழி ஒருபொரு ளனலாம் ; தொடர்மொழி
பலபொரு ளன; பொது இருமையும் ஏற்பன

FUTURE VISION STUDY CENTRE

**கருத்துரை:**

✸ ஒரு மொழிகள் என்பன பகாப்பதமோ, பகுபதமோ ஒன்று நின்று தம்பொருளை உணர்த்துவன. தொடர்மொழிகள் என்பன பகுபதமோ, பகாபதமோ, தம்முள் தொடர்ந்து நின்று இரண்டு முதலிய பல பொருள்களை உணர்த்துவன. பொதுமொழிகள் என்பன ஒரு மொழியாக நின்று பல பொருள்களைத் தந்தும், ஒரு மொழிக்கும் பொதுமொழிக்கும் பொதுவாய் நிற்பன.

**விளக்கவுரை:**

✸ நிலம், நிலத்தன; நட, நடந்தான்; தில், மன்; தவ, நனி என்பன ஒரு மொழிகள்

✸ நிலம் வலிது, அதுகொல், சாலப்பகை, நிலங்கடந்தான், நிலத்தைக் கடந்தான், நிலங்கடந்த நெடுமால் என்பன தொடர்மொழிகள்

✸ எட்டு, தாமரை, வேங்கை என்பன பொதுமொழிகள் எட்டு என்பது ஒருமொழியாய் நின்று எட்டு என்னும் எண்ணும் பொருளைத்தரும். இதுவே எள் + து என்று தொடர்மொழியாய் நின்று எள்ளை உண் என்னும் பொருளைத் தரும். தாமரை என்பது ஒரு மொழியாய் நின்று மலர் என்னும் பொருளை உணர்த்தும். இது தா + மரை எனத் தொடர் மொழியாய் நின்று தாவுகின்ற மான் என்னும் பொருளை உணர்த்தும். வேங்கை என்பது ஒருமொழியாய் நின்று புலி என்னும் பொருளை உணர்த்தும். இதுவே வேம் + கை என தொடர்மொழியாய் நின்று வேகின்ற கை என்னும் பொருளைத் தரும்.

# இருதிணை

**261. மக்கள் தேவர் நரகர் உயர்திணை;**
**மற்றுஉயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.**

**கருத்துரை:**

✸ மக்களும் தேவரும் நரகரும் உயர்திணை. இவரை ஒழிந்த விலங்கு, பறவை முதலில் உயிர் உள்ளனவும், நிலம், நீர் முதலிய உயிர் இல்லாதனவும் அஃறிணை.

**விளக்கவுரை:**

✸ மக்கள் முதலிய மூவகையோருடைய உடம்பையும் உயிரையும் வேறுவேறாகக் குறிக்கும்போது அவை அஃறிணை

(எ.கா) உடல் பருத்தது – உயிர் நீங்கியது
திணை – சாதி, உயர்திணை – உயர்வாகிய சாதி
அஃறிணை – உயர்வு அல்லாத சாதி.

# உயர்திணைப் பால்கள் 3

**262. ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை**

**கருத்துரை:**

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களை உடையது உயர்திணை

**விளக்கவுரை:**

பால், பகுப்பு, ஆடவர், மைந்தர் முதலிய ஆண் பன்மையையும், பெண்டிர், மங்கையர் முதலிய பெண் பன்மையையும் மக்கள், மாந்தர் முதலிய அவ்விருவர் பன்மையையும் அடக்கிப் பலர் என்றார். வரும் சொற்பாவில் பல என்பதும் இவ்வாறு அமைந்ததே ஆகும்.

# அஃறிணைப் பால்கள் 2

**263. ஒன்றே பல என்று இருபாற்று அஃறிணை**

**கருத்துரை:**

ஒன்றன்பாலும், பலவின்பாலும் என இரு பால்களை உடையது அஃறிணை



FUTURE VISION STUDY CENTRE

**விளக்கவுரை:**

அ∴றிணையில் சேவல், களிறு முதலிய ஆண்பாலும், பெடை, பிடி முதலிய பெண்பாலும் இருந்தாலும் இவ்வாண்பால், பெண்பால் என்பன உயிர் உள்ளவற்றில் புழு, மரம் முதலிய சிலவற்றிற்கும் உயிரில்லாதவனவற்றில் கல், மண் முதலிய சிலவற்றிற்கு இல்லை. எனவே இப்பகுப்பை நீக்கிவிட்டு எல்லாவற்றிற்கும் பொருத்தமாக ஒன்றன்பால் என்றார்.

## திணை, பால்களுக்குப் புறனடை

**264.** பெண்மைவிட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்
ஆண்மைவிட்டு அல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அ∴றிணை அன்னவும் ஆகும்.

**கருத்துரை:**

- பெண்தன்மையை விட்டு, ஆண் தன்மையை அவாவுவனாகிய பேடுகள் உயர்திணை ஆண்பாலாகும். ஆண்தன்மையை விட்டுப் பெண் தன்மையை அவாவுவனவாகிய பேடுகள் உயர்திணைப் பெண்பாலாகும். இவ்விருவகைப் பேடுகளும் உயர்திணை ஆவதன்றி அ∴றிணையை ஒத்தும் நடக்கும்.

**விளக்கவுரை:**

- பெண்மை விட்டு ஆண் அவாவுதல், பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுதல். இப்பிறவினைப் பேடி என்பர். ஆண்தன்மை மிகுந்திருந்தால் ஆண் பாலாகவும், பெண்தன்மை மிகுந்திருந்தால் பெண்பாலாகவும் வினை முடிபு கொடுக்க வேண்டும். பொதுவாகக் கூற வேண்டுமாயின் அ∴றிணை போல் வினைமுடிபு கொடுக்க வேண்டும்.

(எ-டு) : அலி வந்தான் - ஆண்பால்
பேடி அணியாளோ? - பெண்பால்
அலி வந்தது. பேடி வந்தது - அ∴றிணை முடிபு

## மூன்றிடத்தும் சொல் தன்மையும் பொருளையும் உணர்த்துதல்

**265. படர்க்கை வினைமுற்று நாமம் குறிப்பின்**
**பெறப்படும் திணைபால் அனைத்தும் ; ஏனை**
**இடத்தவற்று ஒருமைப் பன்மைப் பாலே**

**கருத்துரை:**

- படர்க்கை இடத்தில் வைத்து வினைமுற்றுச் சொற்கள் படர்க்கைப் பெயர்சொல்லையும் சொன்னால் இருத்தல் ஐம்பாலும் பெறப்படும். தன்மை, முன்னிலை ஆகிய இடங்களில் வினைமுற்றுச் சொல்லையும், பெயர்சொல்லையும் சொன்னால் இரு திணை, ஐம்பால்களுள் ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் பெறப்படும்.

**விளக்கவுரை:**

- மூவிடங்களுள் படர்க்கை இடத்திற்கு மட்டுமே இருதிணை ஐம்பால் என்ற பிரிவு உண்டு. தன்மை, முன்னிலை இடங்களில் ஒருமை, பன்மை என்ற பிரிவுகள் உண்டே தவிர இருதிணை, ஐம்பால் என்ற பிரிவு இல்லை.

- தன்மை, முன்னிலைகள் இருதிணைக்கும் பொது

| (எ.டு) உயர்திணை | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
|---|---|---|---|
| படர்க்கை வினைமுற்று | நடந்தான் | நடந்தாள் | நடந்தார் |
| படர்க்கை பெயர் | அவன் | அவள் | அவர் |

| அ∴றிணை | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|
| படர்க்கை வினைமுற்று | நடந்தது | நடந்தன |
| படர்க்கைப் பெயர் | அது | அவை |

இவைகள் படர்க்கைச் சொற்கள்; திணை, பாடல்களை உணர்த்தும்

FUTURE VISION STUDY CENTRE

| இருதிணைப்பொது | ஒருமை | பன்மை |
|---|---|---|
| தன்மை வினைமுற்று | நடந்தேன் | நடந்தோம் |
| தன்மைப் பெயர் | யான் | யாம் |
| முன்னிலை வினைமுற்று | நடந்தாய் | நடந்தீர் |
| முன்னிலைப் பெயர் | நீ | நீர் |

- மூவிடங்களுள் ஒன்றற்குரிய வினைமுற்றும் பெயரும் தம்மையும் பொருளையும் இவ்வாறு உணர்த்தும். எனவே இவ்விடங்களுக்குப் பொதுவாகிய வினைமுற்றுக்களும், பெயர்களும் பொதுமை நீங்கி ஓரிடத்திற்கு உரியனவாகியும், எச்சவினை முதலியனவும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வினைகளைச் சார்ந்தும் இப்படியே தம்மையும் பொருளையும் உணர்த்தும் எனக் கொள்க.

# மூவிடங்கள்

**266. தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே**

**கருத்துரை:**

தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன மூவிடங்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

தன்மை – தன்னைக் குறிப்பது
முன்னிலை – எதிரில் நிற்கும் பொருளைக் குறிப்பது
படர்க்கை - இவ்விரண்டும் அல்லாமல் அயற்பொருளைக் குறிப்பது

(எ-டு) யான், யாம் - தன்மைப் பெயர்
வந்தேன், வந்தேம் - தன்மை வினை
அவன், அவள், அவர் - உயர்திணைப் படர்க்கைப் பொருள்
அது, அவை – அஃறிணைப் படர்க்கைப் பெயர்
வந்தான், வந்தாள், வந்தார் - உயர்திணைப் படர்க்கை வினை
வந்தது, வந்தன – அஃறிணைப் படர்க்கை வினை

# வழக்கு

**267. இலக்கணம் உடையது, இலக்கணப் போலி,**
**மரூஉ என்று ஆகும் மூவகை இயல்பும்**
**இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறி**
**எனும்முத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்.**

**கருத்துரை:**

இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என்று வழங்கும் மூவகை இயல்பு வழக்கும், இடக்கரடக்கல், மங்கலம்,குழூஉக்குறி என்னும் மூவகைத் தகுதி வழக்கும் கூட வழக்கிலக்கணம் ஆறு வகைப்படும்.

**விளக்கவுரை:**

# இயல்பு வழக்கு

1. இலக்கணமுடையது - இலக்கண நெறியால் வருவது (எ-டு) நிலம், நீர், தீ, காற்று, வானம்
2. இலக்கணப்போலி - இலக்கணம் இல்லையாயினும் இலக்கணம் உடையது போலச் சான்றோரால் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருவது.

**(எ-டு)** இல்முன் என்பதை முன்றில் என்றும், நகர்ப்புறம் என்பதைப் புற நகர் என்றும், புறஉலா என்பதை உலாப்புறம் என்றும், கண்மீ என்பதை மீகண் என்றும், கோவில் என்பதைக் கோயில் என்றும் பொதுவில் என்பதை பொதியியல் என்றும் வழங்கும் இவை முதலியன இலக்கணப் போலி.

3. மரூஉ – தொன்று தொட்டு வருதலின்றி இடையில் சில எழுத்துக்கள் கெட்டும், சில எழுத்துகள் தோன்றியும், சில எழுத்துக்கள் திரிந்தும் இலக்கணத்தில் சிதைந்து தானே மருவி வழங்குவது.

FUTURE VISION STUDY CENTRE

(எ-டு)

| உரியது | | மரூஉ |
|---|---|---|
| அருமருந்தன்ன பிள்ளை | - | அருமந்த பிள்ளை |
| மலையமானாடு | - | மலாடு |
| சோழனாடு | - | சோணாடு |
| தொண்டைமானாடு | - | தொண்டைநாடு |
| மரவடி | - | மராடி |
| குளவாம்பல் | - | குளாம்பல் |
| யாவர் | - | ஆர் |
| எவன் | - | என் |
| தஞ்சாவூர் | - | தஞ்சை |

# தகுதி வழக்கு

**1. இடக்கரடக்கல்:**

நன் மக்களிடத்தில் சொல்லத்தகாத இடக்கான சொல்லை அவ்வாய்பாடு மறைத்துப் பிற வாய்பாட்டால் சொல்வது

(எ-டு): மலங் கழுவி வந்தான் என்பதைக் கால் கழுவி வந்தான் என்றும்.

**2. மங்கலம்:**

மங்கலம் இல்லாததை ஒழித்து மங்கலமாகச் சொல்வது (எ.கா) செத்தாரைத் துஞ்சினார் என்றும், ஓலையைத் திருமுகம் என்றும் சுடுகாட்டை நன்காடு என்றும் கூறுதல்

**3. குழூஉக்குறி:**

ஒரு கூட்டத்தார் யாதானும் ஒரு காரணத்தால் ஒரு பொருளில் பெயரை ஒழித்து மற்றொரு பெயரால் கூறுவது

(எ-டு) பொற்கொல்லர் பொன்னைப் பறி என்றும், யானைப்பாகர் ஆடையைக் காரை என்றும், வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்றும் கூறுதல்

**இயல்பு வழக்கு:**

எப்பொருளுக்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் கூறுதல்

**தகுதி வழக்கு**

ஒரு பொருளுக்கு அமைந்த சொல்லால் அப்பொருளைச் சொல்லுதல் தகுதியன்று என்று கருதி வேறொரு சொல்லால் சொல்லுதலே தகுதி என நினைத்துக் கூறுதல்

# செய்யுள்

**268. பல்வகைத் தாதுவின் உயிர்க்குஉடல் போல்பல**
**சொல்லால் பொருட்குஇடன் ஆக உணர்வியல்**
**வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்**

**கருத்துரை:**

தோல், இரத்தம், இறைச்சி, நிணம், எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடமாக இயற்றப்பட்ட உடம்பு போல, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் பல்வகைச் சொற்களாற் பொருளுக்கு இடமாகக் கல்வியறிவினால் செய்யுள் செய்ய வல்லவர் அலங்காரம் பெறச் செய்வன செய்யுள் ஆகும்.

**விளக்கவுரை:**

எழுத்து, சொல்,பொருள், அணி என்னும் நான்கினாலும் அமைவது செய்யுள்

FUTURE VISION STUDY CENTRE

# குறிப்பு – வெளிப்படை

**269. ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி**
**ஆகு பெயர்அன் மொழிவினைக் குறிப்பே;**
**முதல்தொகை குறிப்போடு இன்னபிறவும்**
**குறிப்பின் தருமொழி ; அல்லன வெளிப்படை.**

## கருத்துரை:

இருதிணை ஆண்பெண்ணுள் ஒன்றனை ஒழிக்கும் பொதுச் சொல்லும், வலித்தல், மெலித்தல் முதலாகிய ஒன்பது வகை விகாரச் சொல்லும், வலித்தல், மெலித்தல் முதலாகிய ஒன்பது வகை விகாரச் சொல்லும், மூவகைத் தகுதி வழக்குச் சொல்லும், ஆகுபெயர்ச் சொல்லும். அன்மொழித் தொகைச் சொல்லும், வினைக்குறிப்புச் சொல்லும், முதற்குறிப்புச் சொல்லும், தொகைக் குறிப்புச் சொல்லும், இம்முதற்குறிப்பும், தொகைக்குறிப்பும் அல்லாது பலவழியாலும் வரும் குறிப்புச் சொல்லும், இவைபோல்வன பிறவும் குறிப்பினால் இருதிணை, ஐம்பாற் பொருள்களை தருஞ்சொற்கள் ஆகும். இவை அல்லாதனவெல்லாம் வெளிப்படையால் அப்பொருள்களைத் தருஞ் சொற்களாகும்.

## விளக்கவுரை:

1. ஒன்றொழி பொதுச்சொல் : (எ.கா) ஆயிரமக்கள் பொருதார்
   - இங்கே மக்கள் என்னும் பொதுப்பெயரும், பொருதார் என்னும் பொதுவினையும், உயர்திணைப் பெண்பாலை யொழித்து, ஆண் பாலைக் குறிப்பால் உணர்த்தின.

2. விகாரம் : (எ-டு) குறுத்தாட் பூதம், மரை மலர்
   - இங்கே குறுத்தாள், மரை என்னும் விகாரச் சொற்கள் குறுந்தாள், தாமரை என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின

3. தகுதி : (எ-டு) கால்கழீஇ வருதும், திருமுகம்
   - இங்கே இத்தகுதி வழக்குச் சொற்கள் மலங்கழுவி வருதும், ஓலை என்பனவற்றைக் குறிப்பால் உணர்த்தின

4. ஆகுபெயர் : (எ-டு) புளிதின்றான், சுடுத்தின்றான்
   - இங்கே புளி, சுடு என்னும் ஆகு பெயர்கள் அவற்றின் பழக்கத்தைக் குறிப்பால் உணர்த்தின

5. அன்மொழித்தொகை: (எ-டு) பொற்றொடி தந்த புனைமடல், தேன்மொழி வந்தாள்.
   - இங்கே பொற்கொடி, தேன்மொழி என்னும் அன்மொழித் தொகைகள் அவற்றையுடைய மகளிரைக் குறிப்பால் உணர்த்தின

6. வினைக்குறிப்பு : (எ-டு) இவனிப்போது பொன்னன்
   - இங்கே பொன்னன் என்பது பெயர்ப்பொருளையொழித்து வினைக்குறிப்புப் பொருளைக் குறிப்பால் உணர்த்திற்று

7. முதற்குறிப்பு : (எ-டு) “அறத்தா றிதுவென வெள்ளைக் கிழபு”
   - இங்கே அறத்தாறு இதுவென என்னும் முதற்குறிப்புச் சொற்கள்

   “அறத்தாறிதுவென வேண்டா சிவிகை – பொறுத்தானோ டூர்ந்தானிடை” என்னும் திருக்குறளைக் குறிப்பால் உணர்த்திற்று.

8. தொகைக்குறிப்பு : (எ-டு) “அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ”
   - இங்கே ஐவர் என்னும் தொகைக்குறிப்புச் சொல் பாண்டவரைக் குறிப்பால் உணர்த்துகிறது

9. பிற குறிப்பு : (எ-டு) கற்கறித்து நன்கட்டாய், பாயா வேங்கை, ‘உவர்க்கடலன்ன செல்வர்’
   - இங்கே இவை முறையே நன்கு சமைக்கவில்லை. வேங்கைமரம், ஈயாச் செல்வர் என்னும் பொருளைக் குறிப்பால் காட்டின.

FUTURE VISION STUDY CENTRE

இன்ன பிறவும் என்பதனால் தெரிநிலைவினை, குறிப்பு வினையாலணையும் பெயர்களும், தெரிநிலை வினைமுற்றாலும், குறிப்பு வினைமுற்றாலும் வரும் எச்சங்களும் , செய்யுள் என்னும் முற்றும், கேட்குந போல' முதலியவாக அ்ஃறிணை இடத்துச் சொல்லப்படுவனவும் ஆகிய இவை முதலானவை குறிப்பால் பொருளுணர்த்தும் சொற்கள்.

இவ்வாறு இல்லாமல் நிலம், நீர், தீ, காற்று, வானம் என்றாற்போல் வருவன வெளிப்படையாகப் பொருளுணர்த்தும் சொற்கள்.

---

# சொல்லின் பாகுபாடு

## சொல்லின் வகைகள்

**270. அதுவே,**
**இயற்சொல், திரிசொல், இயற்பிற் பெயர்வினை**
**எனஇரண்டு ஆகும் ; இடைஉரி அடுத்து**
**நான்கும் ஆம் ; திசைவட சொல்அணு காவழி**

**கருத்துரை:**

மேற்காட்டில் சொல்இயற்சொல்லும், திரிசொல்லும் என்னும் தன்மையையுடைய பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் என்று இரண்டு வகைப்படும். இவற்றுள் திசைசொல்லும் வடசொல்லும் சேராத விடத்து இடைச்சொல்லும் உரிச்சொல்லும் சேர்ந்து நான்கு வகைப்படும்.

**விளக்கவுரை:**

இதனால் பெயர் இயற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத் திரிசொல், உரியியற்சொல், உரித்திரிசொல் எனச் சொல் எட்டு வகைப்படும். இவற்றுடன் திசைசொல், வடசொல் என்பனவற்றைக் கூட்டச் சொல் பத்து வகைப்படும்

## இயற்சொல்

**271. செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்**
**தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்**

**கருத்துரை:**

செந்தமிழ் நாட்டில் வழங்கும் மொழியாகித் திரிசொல் போல இல்லாமல் கற்றோருக்கும் கல்லாதோருக்கும் ஒப்பத் தம் பொருளை விளக்கும் தன்மையுடைய உலக வழக்குச் சொற்களே இயற்சொல் ஆகும்.

**விளக்கவுரை:**

இயற்சொல் - இயல்பாய் யாவருக்கும் பொருள் விளங்கும் சொல்

(எ-டு) மண், பொன் - பெயரியற்சொல்
நடந்தான், வந்தான் - வினையியற்சொல்
அவனை, அவனால் - இவைகளில் ஐ, ஆல் என்பன இடையியற்சொல்
அழகு, அன்பு - உரியியற்சொல்

## திரிசொல்

**272. ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்**
**பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்**
**அரிதுணர் பொருளன திரிசொல் ஆகும்**

**கருத்துரை:**

ஒரு பொருளைத் தெரிவிக்கின்ற பல சொற்களாகியும், பல பொருள்களைத் தெரிவிக்கின்ற ஒரு சொல்லாகியும் அரிதாகக் கூறியவர்களால் மட்டுமே அறியும் பொருள் உடையனவாய் வருவன திரிசொல் ஆகும்

FUTURE VISION STUDY CENTRE

**விளக்கவுரை:**

திரிசொல் - இயற்சொல்லிருந்து திரிந்து வேறுபட்ட சொல். திரிதல் வேறுபடுதல். வேறுபடுதல் என்பது இயற்சொல் போல இயல்பாக எளிதில் பொருள் உணரப்படாமல் அரிதில் பொருள் அறியப்படுதல்

(எ-டு) கிள்ளை, சுகம், தத்தை

- இவை கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்

(எ-டு) வாரணம்

- இது யானையும் கோழியும் சங்கும் முதலாகிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்

படர்ந்தான், சென்றான் - இவை போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்

வரைந்தான் - இது நீக்கினான், கொண்டான் என்னும் பல குறித்த ஒரு வினைத் திரிசொல்

சேறும், வருதும் என்பனவற்றுள், றும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர்காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத்திரிசொல்

கொல் - இது ஐயமும் அசைநிலையுமாகிய பல பொருள் குறித்த ஓரிடைத் திரிசொல்

சால, உறு, தவ, நனி, கூர், கழி - இவை மிகுதி என்னும் ஒரு பொருள் குறித்த பல உரித்திரிசொல்

கடி - இது காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம், சிறப்பு, மணம் முதலிய பல பொருள் குறித்த ஓர் உரித்திரிசொல்

# திசைச்சொல்

**273. செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒளி நிலத்தினும்**
**தம்குறிப் பினவே திசைச்சொல் என்ப.**

**கருத்துரை:**

செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும் பதினெட்டு மொழிகளுள் தமிழ் நிலம் ஒழிந்த பதினேழு நிலங்கள் உள்ளோர், தம் குறிப்பினவாய் அத்திசைகளின்றும் செந்தமிழ் வந்து வழங்குவன திசைச்சொல் என்று சொல்லுவர் புலவர்.

**விளக்கவுரை:**

திசைச்சொல் - திசை நாடுகளிலிருந்து செந்தமிழில் வந்து வழங்கும் சொற்கள்

கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டாவன; தென்பாண்டி நாடு, குட்டநாடு, கற்காநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலைநாடு, சீதநாடு, மலையமானாடு, சோழனாடு என்பன. தென்பாண்டி நாடு – செந்தமிழ்ப் பாண்டி நாட்டுக்குத் தென்திசையில் உள்ளது.

(எ-டு)

| | |
|---|---|
| 1. பசுவைப் பெற்றம் என்பது<br>சோற்றைச் சொன்றி என்பதும் | - தென்பாண்டி நாட்டுச்சொல் |
| 2. தாயைத் தள்ளை என்பது | - குட்டநாட்டுச் சொல் |
| 3. தந்தையை அச்சன் என்பது | - குடநாட்டுச் சொல் |
| 4. வஞ்சகரைக் கையர் என்பது | - கற்காநாட்டுச் சொல் |
| 5. தொட்டத்தைக் கிழார் என்பது | - வேணாட்டுச் சொல் |
| 6. சிறுகுளத்தைப் பாழி என்பது | - பூழிநாட்டுச் சொல் |
| 7. வயலைச் செய் என்பது | - பன்றி நாட்டுச் சொல் |
| 8. சிறுகுளத்தைக் கேணி என்பது | - அருவாநாட்டு சொல் |
| 9. புளியை எகின் என்பது | - அருவா வடதலை நாட்டுச்சொல் |
| 10. தோழனை எலுவன் என்பதும்<br>தோழியை இகுளை என்பதும் | - சீதநாட்டுச் சொல் |
| 11. நல்லநீரை வெள்ளம் என்பது | - மலையமானாட்டுச் சொல் |
| 12. தாயை ஆய் என்பது | - சோழ நாட்டுச் சொல் |

FUTURE VISION STUDY CENTRE

தமிழ்நாடு ஒழிந்த பதினேழு நாடுகள் சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம்.

அந்தோ என்பது - சிங்களச் சொல்
மாமரத்தைச் கொக்கு என்பது - துளுவ நாட்டுச் சொல்
அகப்படுதலைச் சிக்குதல் என்பது - கன்னட நாட்டுச் சொல்
எருத்தைப் பாண்டில் என்பது - தெலுங்க நாட்டுச் சொல்.

# வடசொல்

**274. பொதுஎழுத் தானும் சிறப்புஎழுத் தானும்
ஈர்எழுத் தானும் இயைவன வடசொல்**

**கருத்துரை:**

ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவான எழுத்தாலும் ஆரியத்திற்கே உரியதான சிறப்பு எழுத்துத் திரிந்த எழுத்தாலும் இவ்விரண்டு எழுத்தாலும் செந்தமிழ்ச் சொல் போன்றனவாகி வடதிசையிலிருந்து செந்தமிழ் நிலத்தில் வந்து வழங்கும் சொல் வடசொல் ஆகும்.

**விளக்கவுரை:**

1. அமலம், கமலம் - என்பன பொது எழுத்தால் வந்தன
2. சுகி, போகி, சுத்தி – என்பன ஆரியத்திற்குரிய சிறப்பு எழுத்தால் வந்தன
3. அரன், அரி, சலம் - என்பன பொது எழுத்தாலும், சிறப்பு எழுத்தாலும் வந்தன

# பெயர்ச் சொல்

**275. இடுகுறி காரண மரபோடு ஆங்கிலம்
தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.**

**கருத்துரை:**

இடுகுறியும் காரணக்குறியும், மரபினையும் ஆக்கப் பாட்டினையும் தொடர்ந்து வினையாலணையும் பெயர் ஒன்று மட்டும் காலங் காட்ட, அல்லாதன காலத்தைக் காட்டாதனவாய் எட்டு வேற்றுமைகளும் சார்வதற்கு இடமாகி இரு திணையிலும், ஐம்பாலிலும், மூவிடத்திலும் ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவும் ஆகி வருவன பெயர்கள் ஆகும்.

(எ-டு) 1. மரம், விள, பனை - இடுகுறி மரபு
2. அவன், அவள், விலங்கு, பறவை – காரணக்குறி மரபு
3. “பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கியைந்தனனே – மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர் போம்
காளவேன் முட்டைக்கும் காடு”

என்னும் பொய்யாமொழிப் புலவர் பாட்டில் முருகக் கடவுள் பெயர் முட்டை என்றது இடுகுறி ஆக்கம்

4. பொன்னன், பூணன் - காரணக் குறியாக்கம்
நடந்தவனை, நடந்தானை – வினையாலணையும் பெயர்கள் காலங் காட்டின

மரம், பனை முதலாகிய இடுகுறிப்பெயரும், அவன், அவள் முதலாகிய காரணப் பெயரும், தொன்றுதொட்டு மரபு பற்றி வருவன முட்டை முதலாகிய இடுகுறிப் பெயரும், பொன்னன் முதலாகிய காரணப் பெயரும், மரபு போலத் தொன்றுதொட்டு வருதலின்று நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

FUTURE VISION STUDY CENTRE

# உயர்திணை ஆண்பால் பெயர்

276. அவற்றுள்,
கிளைஎண் குழூஉ முதல் பல்பொருள் திணைதேம்
ஊர்வான் அகம்புறம் முதல் நிலன்கொண்டு
இருது மதிநாள் ஆதிக் காலம்
தோள்குழல் மார்புகண் காதுமுதல் உறுப்பு
அளவுஅறிய ஒப்பு வடிவு நிறம்கதி
சாதி குடிசிறப்பு ஆதிப் பல்குணம்
ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை
இவைஅடை சுட்டு வினாப்பிற மற்றோடு
உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ
விடலை கோவேள் குரிசில் தோன்றல்
இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப.

**கருத்துரை:**

✸ முன் சூத்திரத்தில் பெயர் என்றவற்றுள் சுற்றம், எண், கூட்டம் முதலியனவாகிய பல பொருள்களையும், ஐந்திணை, தேயம், ஊர், வான், அகம், புறம் முதலிய இடங்களையும் ஆண்டு, பருவம், மாதம், நாள்மீன் என்ற காலப் பெயர்களையும், தோள், மயிர், மார்பு, கண், காது முதலிய உறுப்புக்களையும், அளவு, அறிவு, ஒப்பு, வடிவு, நிறம், நாற்கதி, சாதி, குடி, சிறப்பு முதலிய பெயர்களையும் ஓதுதல், கொடுத்தல் முதலிய பல தொழில்களையும், அவற்றை அடைந்த சுட்டு, வினா, பிற, மற்று ஆகிய நான்கையும் பொருந்தியன்' என்ற ஈற்றை உடைய பெயர்களும் ஆகும் என்று சொல்லுவர்.

**விளக்கவுரை:**

**1. பொருளால் வரும் பெயர்கள்:**

(எ.டு) : தமன், நமன், நுமன், எமன் - கிளையால் வருபெயர்
ஒருவன் - எண்ணால் வருபெயர்
அவையத்தான் , அத்தி, சோசத்தான் - குழூஉவால் வருபெயர்
பொன்னன், முடியன் - ‘முதல்’ என்றதனால் வருபெயர்

**2. இடத்தால் வரும் பெயர்கள்:**

✸ வெற்பன், பொருப்பன் - குறிஞ்சி நிலத்தால் வருபெயர்
மறவன், எயினன் - பாலை நிலத்தால் வருபெயர்
இடையன், ஆயன் - முல்லை நிலத்தால் வருபெயர்
ஊரன், மகிழ்நன் - மருத நிலத்தால் வருபெயர்
சேர்ப்பன், துறைவன் - நெய்தல் நிலத்தால் வருபெயர்
சோழியன், கொங்கன் - தேய்த்தால் வருபெயர்
கருவூரான், மதுரையான் - ஊரால் வருபெயர்
வாத்தான், அகத்தான், புறத்தான் - வான் முதலிய மூன்றாலும் வருபெயர்
மண்ணகத்தான், பாதலத்தான் - ‘முதல்’ என்றதனால் வருபெயர்

**3. காலத்தால் வரும் பெயர்கள்:**

மூவாட்டையான், பிரபவன் - ஆண்டால் வருபெயர்
வேனிலான் - காரான் - பருவத்தால் ஆகுபெயர்
தையான் - மாசியான் - மாதத்தால் வருபெயர்
ஆதிரையான் , ஓணத்தான் - நாள்மீனால் வருபெயர்
நெருநலான், காலையான் - ‘ஆதி’ யென்தனால் வருபெயர்

**4. சினையால் வரும் பெயர்கள்:**

திணிதோளன், செங்குஞ்சியன், வரைமார்பன், செங்கண்ணன், குழைக்காதன் - தோள் முதலிய ஐந்துறுப்பாலும் வருபெயர்.
குறுந்தாளன், நெடுங்கையன்
- ‘முதல்’ என்றதனால் வருபெயர்

FUTURE VISION STUDY CENTRE

**5. குணத்தால் வரும் பெயர்கள்:**

பெரியன், சிறியன் - அளவால் வருபெயர்
அறிஞன், புலவன் - அறிவால் வருபெயர்
பொன்னொப்பான், மணியனையான் - ஒப்பால் வருபெயர்
கூனன், குறளன் - வடிவால் வருபெயர்
கரியன், செய்யன் - நிறத்தால் வருபெயர்
மானுடன், தேவன் - கதியால் வருபெயர்
அந்தணன், வேளாளன் - சாதியால் வருபெயர்
சேரன், சோழன், பாண்டியன் - குடியால் வருபெயர்
ஆசிரியன், படைத்தலைவன் - சிறப்பால் வருபெயர்
நல்லன், தீயன் - 'ஆதி' யென்றதனால் வருபெயர்

**6. தொழிலால் வரும் பெயர்கள்:**

ஓதுவான் , ஈவான்
- ஓதல் முதலாகிய இரண்டாலும் வருபெயர்
கணக்கன், தச்சன்
- 'ஆதி' என்றதனால் வருபெயர்

**7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்:**

அவன், இவன், உவன் - சுட்டிடைச் சொல்லால் வருபெயர்
எவன், ஏவன், யாவன் - வினா இடைச் சொல்லால் வருபெயர்
பிறன், மற்றையான் - பிற, மற்று என்பவற்றால் வருபெயர்

**8. நம்பி முதுலாகிய ஏழு பெயர்களும் நாற்பாவில் உள்ளன.**

'இன்னன' என்றதனால் விவ்வி, வாளி, கிள்ளி, சென்னி, ஏந்தல், செம்மல், ஏனாதி, காவிதி, குடுமி, அண்ணல் என உயர்திணை ஆண்பாற் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.

## உயர்திணைப் பெண்பாற் பெயர்

**277. கிளைமுத லாகக் கிளிந்த பொருள்களுள்**
**ளவ்வொற்று இகரக்கு ஏற்ற ஈற்றவும்**
**தோழி செவிலி மகடூஉ நங்கை**
**தையலோடு இன்னன பெண்பால் பெயரே**

**கருத்துரை:**

✸ முன் நூற்பாவில் கிளை முதலாகக் கூறப்பட்ட அறுவகைப் பொருள்களுள்ளும் இடைச்சொற்களுள்ளும் ஒன்றின் அடியாகத் தோன்றி, 'ள்' என்ற மெய்யும் 'இ' என்ற உயிரும் பொருந்துவதற்கு ஏற்ற அவ்விரண்டு ஈற்றுப் பெயர்களும் தோழி, செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்னும் பெயர்களும். இவை போல்வன பிறவும் உயர்திணை பெண்பால் பெயர்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

## 1. பொருளால் வரும் பெயர்கள்

(எ.டு) தமள், நமள், நுமன், எமள் - கிளையால் வருபெயர்
ஒருத்தி – எண்ணால் வருபெயர்
அவையத்தாள், அவையத்தி – குழூஉவால் வருபெயர்
பொன்னாள், பொன்னி – 'முதல்' என்றதனால் வருபெயர்

**2. இடத்தால் வரும் பெயர்கள்:**
குறத்தி – குறிஞ்சி நிலத்தால் வருபெயர்
எயிற்றி – பாலை நிலத்தால் வருபெயர்
ஆய்ச்சி – முல்லை நிலத்தால் வருபெயர்
உழத்தி – மருத நிலத்தால் வருபெயர்
பரத்தி – நெய்தல் நிலத்தால் வருபெயர்
மலையாட்டி, சோழிச்சி – தேய்த்தால் வருபெயர்
கருவூராள், கருவூரி – ஊரால் வருபெயர்

வானத்தாள், அசுத்தாள், புறத்தாள் - வான் முதலிய மூன்றாலும் வருபெயர்
மண்ணகத்தான், மண்ணகத்தி – 'முதல்' என்றதனால் வருபெயர்

**3. காலத்தால் வரும் பெயர்கள்**

மூவாட்டையாள் - ஆண்டாள் வருபெயர்
வேனிலாள் - பருவத்தால் வருபெயர்
தையாள் - மாதத்தால் வருபெயர்
ஆதிரையாள் - நாள்மீனால் வருபெயர்
நெருநலாள் - முதல என்றதனால் வருபெயர்

**4. சினையால் வரும் பெயர்கள்**

திணிதோளன், சுரிகுழலாள், நெடுமார்பன், தடங்கண்ணாள், குழைக்காதாள் - தோள் முதலிய ஐந்துறுப்பாலும் வருபெயர்

**5. குணத்தால் வரும் பெயர்கள்**

பெரியன் - அளவால் வருபெயர்
புலமையன் - அறிவால் வருபெயர்
கூனல், கூனி – வடிவால் வருபெயர்
பொன்னொப்பாள் - ஒப்பால் வருபெயர்
கரியள் - நிறத்தால் வருபெயர்
மானுடத்தி – கதியால் வருபெயர்
பார்ப்பினி – சாதியால் வருபெயர்
மனைத்தலைவி – சிறப்பால் வருபெயர்
நல்லள் - முதல என்பதால் வருபெயர்.

**6. தொழிலால் வரும் பெயர்கள்**

ஓதுவாள், ஈவாள் - ஓதல் முதலாகிய இரண்டாலும் வருபெயர்

**7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்:**

அவள், இவள், உவள் - சுட்டிடைச் சொல்லால் வரும் பெயர்கள்
எவள், ஏவள், யாவள் - வினாவிடைச் சொல்லால் வரும் பெயர்கள்
பிறள், மற்றையாள் - பிற, மற்று என்பனவற்றால் வரும் பெயர்கள்

**8. தோழி முதலிய ஐந்து பெயர்களும் நூற்பாவில் உள்ளன**

'இன்னன' என்றதனால் பேதை, பெதும்பை, இகுளை, மடந்தை,மாது, பாங்கி, பெண்டு.பெண்டாட்டி என உயர்திணைப் பெண்பால் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.

## உயர்திணைப் பலர்பாற் பெயர்

**278. கிளந்த கிளைமுதல் உற்றரவ் வீற்றவும்
கள்ளன் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி ஆகும்.**

**கருத்துரை:**

✸ முன் சூத்திரத்தில் கிளை முதலாகக் கூறப்பட்ட அறுவகைப் பொருள்களையும் இடைச்சொற்களையும் அடியாகக் கொண்டு தோன்றிய 'ர்' என்ற மெய்யிற்றுப் பெயர்களும் 'கள்' என்னும் விகுதியை ஈறாக உடைய பெயர்களுள் பலர்பாலுக்குப் பொருந்தி வருவனவும், இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள் ஆகும்.

**விளக்கவுரை:**

**1. பொருளால் வரும் பெயர்கள்**

(எ.டு) தமர், நமர் - கிளைப்பெயர்
இருவர், மூவர் - எண்ணால் வருபெயர்
அவையத்தார்- குழூஉப்பெயர்
முடியர், பொருளர் - முதல் என்பதால் வருபெயர்



FUTURE VISION STUDY CENTRE

**2. இடத்தால் வரும் பெயர்கள்:**

குறவர் - குறிஞ்சி நிலத்தால் வருபெயர்
எயினர் - பாலை நிலத்தால் வருபெயர்
ஆயர் - முல்லை நிலத்தால் வருபெயர்
உழவர் - மருத நிலத்தால் வருபெயர்
பரதவர் - நெய்தல் நிலத்தால் வருபெயர்
சோணாட்டார் - தேயத்தால் வருபெயர்
கருவூரார் - ஊரால் வருபெயர்
வானத்தார், அகத்தார், புறத்தார் - வான் முதலிய மூன்றாலும் வரும்
மண்ணகத்தார் - முதல் என்றதனால் வருபெயர்.

**3. காலத்தால் வரும் பெயர்கள்:**

மூவாண்டினர் - ஆண்டால் வருபெயர்
வேனிலார் - பருவத்தால் வருபெயர்
ஐப்பசியார் - மாத்தால் வருபெயர்
ஆதிரையார் - நாள்மீனால் வருபெயர்
காலையார் - முதல என்றதனால் வருபெயர்

**4. சினையால் வரும் பெயர்கள்:**

திணிதோளார், கரிகுழலார், நெடுமார்பர், தடங்கண்ணார், குழைக்காதர் - தோள் முதலிய ஐந்துறுப்பாலும் வருபெயர்

‘நெடுங்கையார்’ – முதல என்றதனால் வருபெயர்

**5. குணத்தால் வரும் பெயர்கள்:**

பெரியர் - அளவால் வருபெயர்
அறிஞர் - அறிவால் வருபெயர்
பொன்னொப்பர் - ஒப்பால் வருபெயர்
கூனர் - வடிவால் வருபெயர்
கரியர் - நிறத்தால் வருபெயர்
மானிடர், தேவர் - கதியால் வருபெயர்
அந்தணர் - சாதியால் வருபெயர்
பாண்டியர் - குடியால் வருபெயர்
தலைவர் - சிறப்பால் வருபெயர்
நல்லர் - முதல என்பதனால் வருபெயர்

**6. தொழிலால் வரும் பெயர்கள்:**

ஓதுவார், ஈவார் - ஓதல் முதலிய இரண்டினாலும் வருபெயர்
கொல்லர் - முதல் என்றதனால் வருபெயர்

**7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள்:**

அவர், இவர் - சுட்டுப்பெயர்
எவர், யாவர் - வினாப்பெயர்
பிறர், மற்றையார் - பிற, மற்று என்பவற்றால் வரும் பெயர்கள்
கோக்கன், மனுக்கள் என்பன போல்வன பகுதிப் பொருள் விகுதியீற்றுப் பெயர்கள்
தமர்கள், நமர்கள் என்பன போல்வன விகுதி மேல் விகுதியீற்றுப் பெயர்கள்
‘பிற’ என்பதனால் மாந்தர், மக்கள், மகார், சிறார், வேளிர் எனப் பலர்பாலைக் குறித்து வருவன எல்லாம் கொள்க.

## அஃறிணை ஒன்றன்பாற் பெயர்

**279. வினாச்சுட் டுடனும் வேறு மாம்பொருள்**
**ஆதி யுறுதுச் சுட்டணை ஆய்தம்**
**ஒன்றெனன் எண் இன்னன ஒன்றன் பெயரே**

**கருத்துரை:**

- வினாவிலும் சுட்டிலும் மறைந்து அவற்றுடனாகியும், வினாவும், சுட்டவும் படாது வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறினையும் அடியாகக் கொண்டு தோன்றும். ‘து’ ‘வ்’ விகுதியீற்றுப் பெயரும், சுட்டோடு கூடிய ஆய்த எழுத்தைப் பெற்றுவரும். ‘து’ ‘வ்’ விகுதியீற்றுப் பெயரும், ஒன்று என்னும் எண்ணாகு பெயரும், இவை போல்வன பிறவும் அஃறிணை ஒன்றன்பாற் பெயர்களாம்.



FUTURE VISION STUDY CENTRE

**விளக்கவுரை:**

(எ.டு) எது, ஏது, யாது – வினைப் பெயர்
அது, இது, உது – சுட்டுப் பெயர்

- குழையது , நிலத்தது, மூலத்தது, கோட்டது, குறியது, ஆடலது பொருள் முதலிய ஆறின் அடியாகப் பிறந்த துவ்விகுதி யீற்றுப் பெயர்கள்.

- அஃது, இஃது, உஃது – சுட்டோடு கூடிய ஆய்தத்தைப் பொருந்திய துவ்விகுதி யீற்றுப் பெயர்கள்

- ஒன்று – எண்ணாகு பெயர்

- 'இன்னன' என்றதனால் பிறிது, மற்றையது என அஃறிணை ஒன்றன்பால் குறித்து வருவன வெல்லாம் கொள்க.

## அஃறிணைப் பலவின்பாற் பெயர்

**280. முன்னர் அவ்வொடு வருவை அவ்வும்,**
**சுட்டுஇறு வவ்வும், கள்இறு மொழியும்,**
**ஒன்றுஅல் எண்ணும், உள்ள இல்ல**
**பல்ல, சில்ல உளஇல பலசில**
**இன்னவும் பலவின் பெயரா கும்மே**

**கருத்துரை:**

- முன் நூற்பாவில் கூறப்பட்ட வினாச் சுட்டுடனும், அவற்றின் வேறாகியும் வரும் பொருள் முதலிய ஆறனோடும் ஏற்றபடி வரும் 'வை' விகுதியீற்றுப் பெயர்களும், வகர மெய்யை ஈறாக உடைய சுட்டுப் பெயர்களும், கள் என்னும் பகுதிப் பொருள் விகுதியீற்றுப் பெயர்களுடன் இரண்டு முதலிய எண்ணாகு பெயர்களும், உள்ள இல்ல பல்ல சில்ல உள இல பல சில என்னும் எட்டுக்குறிப்பு வினையாலணையும் பெயர்களும், இவை போல்வன பிறவும் அஃறிணைப் பலவின்பாற் சொற்களாம்.

**விளக்கவுரை:**

(எ.டு) எவை, ஏவை, யாவை
- வை விகுதி பெற்ற வினாப் பெயர்கள்
அவை, இவை உவை
- வை விகுதி பெற்ற சுட்டுப்பெயர்கள்

நெடியவை, கரியவை
- வினாச்சுட்டின் வேறாகி வரும் 'வை' யீற்றுப் பெயர்கள்
பொருள், பொருளன்;
அசுத்த, அசுத்தன;
மூலத்த, மூலத்தன;
கோட்ட, கோட்டன;
கரிய, கரியன;
ஓதுவ, ஓதுவன.

- அன் சாரியை பெற்றும் பெறாதும் வந்த அகர விகுதிப் பெயர்கள் அவ், இவ், உப் - வகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர்கள்

யானைகள், குதிரைகள் - கள் விகுதிப் பெயர்கள்
இரண்டு, மூன்று, பத்து, நூறு – எண்ணாகு பெயர்கள்
உள்ள என்பது முதலிய எட்டுப் பெயர்களும் நூற்பாவில் உள்ளன.
'இன்னவும்' என்றதனால் யா, பிற, மற்றைய என அஃறிணைப்பலவின்பாற் பொருள் குறித்து வருவன எல்லாம் கொள்க.
இவ்வைம்பாற் பெயர்களுள் ஆண்பாற் பெயர்க்கு 'னவ்வீறு' எனவே ஆன், அன், மன், மான், ன் என்னும் ஐந்தும் அடங்கும்.
பலர்பாற் பெயர்க்கு 'ரவ்வீற்ற' எனவே, அர், ஆர், மார், ர் என்னும் நான்கும் அடங்கும்

FUTURE VISION STUDY CENTRE

## பால்பகா அஃறிணைப் பெயர்

**281. பால்பகா அஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய**

**கருத்துரை:**

- அஃறிணைப் பெயர்களுள் ஒன்றன்பால், பலவின்பால் எனப் பகுக்க முடியாத பெயர்ச்சொற்கள், அத்திணையின் இரு பால்களுக்கும் பொதுவாகிய பெயர்களாகும்.

**விளக்கவுரை:**

- பால்பகா அஃறிணைப் பெயராவது, இன்ன பால் எனத்தொல்லோரால் பகுத்துக் கூறப் பெறாத இருபாற்கும் (ஒன்றன்பால், பலவின்பால்) பொதுவான அஃறிணைப் பெயர்களாம்.

(எ.டு) : பறவை வந்தது, பறவை வந்தன
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன

- இச்சூத்திரத்தினுள் சொல்லப்பட்ட அஃறிணைப் பெயர்கள் து, வை, அ, கள் என்னும் விகுதிகளைப் பெறாதவை
- இவை பறவை, அலரி எனப் பகுபதமாகவும் மரம்,பனை எனப் பகாப்பதமாகவும் வரும்.

## இருதிணைப் பொதுப்பெயர்

**282. முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்,**
**சினைமுதற் பெயர் ஒரு நான்கும், முறை இரண்டும்**
**தன்மை நான்கும், முன்னிலை ஐந்தும்**
**எல்லாம், தாம், தான், இன்னன பொதுப்பெயர்**

**கருத்துரை:**

- முதற்பெயர்கள் நான்கும், சினைப்பெயர்கள் நான்கும், சினைமுதற் பெயர்கள் நான்கும், முறைப் பெயர்கள் இரண்டும், தன்மைப் பெயர் நான்கும், முன்னிலைப் பெயர் ஐந்தும், எல்லாம் தாம் தான் என்பனவும் இவை போல்வன பிறவும் இருதிணைக்கும் பொதுப்பெயர்களாம்.

**விளக்கவுரை:**

- முதற் பெயராவது காரணம் கருதாமல் ஒரு பொருளைப் பற்றி வரும் பெயர். சினைப் பெயராவது உறுப்பின் காரணமாக வரும் பெயர்.

- சினைமுதற் பெயராவது உறுப்பைக் காரணமாகக் கொண்டும், உறுப்பை உடைய முதல் பொருளைக் கொண்டும், வழங்கும் பெயர்.
- முறை பெயராவது தந்தை, தாய் என்பன போல் முறை(உறவு) பற்றி வரும் பெயர்.
- 'இன்னன' என்றதனால், சூரியன் உதித்தான், சூரியன் உதித்தது என ஒரு பொருளையே உயர்திணையாகவும், அஃறிணையாகவும் கூறும். பொதுப்பெயர் முதலியனவும், ஊமை வந்தான், ஊமை வந்தாள் என உயர்திணை இரு பாலையும் உணர்த்தும் பொதுப்பெயர்களும், தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர்களும் பிறவும் கொள்ளப்படும்.
- முதல், சினை முதலிய பெயர்களுக்கு எடுத்துக் காட்டுகளை அவற்றின் வகைபற்றிக் கூறும் சூத்திரங்களில் காண்க.

## முதற்பெயர் முதலிய நான்கையும் வகுத்தல்

**283. ஆண்மை பெண்மை ஒருமை பன்மையின்**
**ஆம்அந் நான்மைகள் ; ஆண்பெண் முறைப்பெயர்**

**கருத்துரை:**

- ஆண்மை பெண்மை ஒருமை பன்மை என்னும் நான்கு பாலும் காரணமாக அம் முதற் பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் என்னும் மூன்றும் ஒவ்வொன்றும் நந்நான்காகும். ஆண்மை பெண்மை என்னும் இருபாலும் காரணமாக முறைப்பெயர் இரண்டாகும்.

FUTURE VISION STUDY CENTRE

**விளக்கவுரை:**

**1. முதற்பெயர் நான்கு:**

(எ.டு) சாத்தன் - ஆண்மை முதற்பெயர்
சாத்தி – பெண்மை முதற்பெயர்
கோதை – ஒருமை முதற்பெயர்
கோதைகள் - பன்மை முதற்பெயர்

**2. சினைப்பெயர் நான்கு:**

முடவன் - ஆண்மைச் சினைப்பெயர்
முடத்தி – பெண்மைச் சினைப்பெயர்
செவியிலி – ஒருமைச் சினைப்பெயர்
செவியிலிகள் - பன்மைச் சினைப்பெயர்

**3. சினைமுதல் பெயர் நான்கு:**

முடக்கொற்றன் - ஆண்மைச் சினைமுதற் பெயர்
முடக்கொற்றி – பெண்மைச் சினைமுதற் பெயர்
கொடும் புற மருதி – ஒருமைச் சினைமுதற் பெயர்
கொடும் புற மருதிகள், பன்மைச் சினைமுதற் பெயர்

**4. முறைப் பெயர் இரண்டு:**

தந்தை - ஆண்மை முறைப்பெயர்
தாய் - பெண்மை முறைப்பெயர்

# திணைப் பொதுப் பெயர் பால் பொதுவாதல்

**284. அவற்றுள்,**
**ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.**

**கருத்துரை:**

- ✸ முதற்பெயர் முதலாகச் சொல்லப்படும் இருபத்தாறும் பிறவுமாகிய பொதுப் பெயர்களுள், ஒவ்வொன்றும் இருதிணையிலும் தன் தன் பால்களை ஏற்று வரும்.

**விளக்கவுரை:**

- ✸ எனவே, ஆண்மைப் பொதுப்பெயர், உயர்திணை ஆண்பாலையும், அ∴றிணை ஆண்பாலையும் ஏற்கும்.
- ✸ பெண்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பெண்பாலையும் அ∴றிணைப் பெண்பாலையும் ஏற்கும். ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை ஆண் ஒருமையையும், பெண் ஒருமையையும் அ∴றிணை ஒருமையையும் ஏற்கும்.
- ✸ பன்மைப் பொதுப்பெயர் உயர்திணைப் பன்மையையும் அ∴றிணைப் பன்மையையும் ஏற்கும்

**1. முதற்பெயர் நான்கு:**

(எ.டு) : சாத்தன் இவன், சாத்தன் இவ்வெருது
- சாத்தன் என்னும் ஆண்மை முதற்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று
சாத்தி இவள், சாத்தி இப்பசு
- சாத்தி என்னும் பெண்மை முதற்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று
கோதை இவன், கோதை இவள், கோதை இது
- கோதை என்னும் ஒருமை முதற்பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று
கோதைகள் இவர், கோதைகள் இவை.
- கோதைகள் என்னும் பன்மை முதற்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று

**2. சினைப்பெயர் நான்கு:**

முடவன், இவன், முடவன் இவ்வெருது
- முடவன் என்னும் ஆண்மைச் சினைப்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று
முடத்தி இவள், முடத்தி இப்பசு.
- முடத்தி என்னும் பெண்மைச் சினைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று
செவியிலி இவன், செவியிலி இவள், செவியிலி இது.
- செவியிலி என்னும் ஒருமைச் சினைப்பெயர், இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று
செவியிலிகள் இவர், செவியிலிகள் இவை.
- செவியிலிகள் என்னும் பன்மைச் சினைப்பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று

**3. சினை முதற்பெயர் நான்கு:**

முடக்கொற்றன் இவன், முடக்கொற்றன் இவ்வெருது
- முடக் கொற்றன் என்னும் ஆண்மைச் சினைமுதற் இருதிணை ஆற்பாற்கும் பொதுவாயிற்று
முடக்கொற்றி இவள், முடக்கொற்றி இப்பசு
- முடக்கொற்றி என்னும் பெண்மைச் சினைமுதல் பெயர். இது திணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று

FUTURE VISION STUDY CENTRE

கொடும்புற மருதி இவன்
கொடும்புற மருதி இவள்
கொடும்புற மருதி இது
கொடும்புற மருதி என்னும் ஒருமைச் சினைமுதற் பெயர் இருதிணை ஒருமை மூன்றற்கும் பொதுவாயிற்று.
கொடும்புற மருதி இவர்
கொடும்புற மருதிகள் இவை
- கொடும்புற மருதி என்னும் பன்மைச் சினைமுதற் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று

**4. முறைப் பெயர் இரண்டு:**
தந்தை இவன், தந்தை இவ்வெருது
- தந்தை என்னும் ஆண்மை முறைப்பெயர் இருதிணை ஆண்பாற்கும் பொதுவாயிற்று.
தாய் இவள், தாய் இப்பசு
- தாய் என்னும் பெண்மை முறைப்பெயர் இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று

**5. தன்மைப் பெயர் நான்கு:**

யான் நம்பி, யான் நங்கை, யான் பூதம்
- யான் என்னும் தன்மைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றிற்கும் பொதுவாயிற்று
'நான்' என்பதனோடும் இவ்வாறே இணைத்துக் கொள்க.
யாம் மக்கள், யாம் பூதங்கள்
- யாம் என்பது தன்மைப் பன்மைப் பெயர் இருதிணை பன்மைக்கும் பொதுவாயிற்று
- நாம் என்பதனோடும் இவ்வாறே இணைக்கவும்

**6. முன்னிலைப் பெயர் ஐந்து:**

நீ நம்பி, நீ நங்கை, நீ பூதம்
- நீ என்னும் முன்னிலைப் பெயர் இருதிணை ஒருமை மூன்றிலும் பொதுவாக வந்தது.
நீர் மக்கள், நீர் பூதங்கள்
- நீர் என்னும் முன்னிலைப் பெயர் இருதிணை பன்மைக்கும் பொதுவாயிற்று
எல்லீர், நீயிர், நீவிர் என்னும் பெயர்களோடும் இவ்வாறே இணைத்துக் கொள்க

**7. எல்லாம் தாம் தான்:**

அவரெல்லாம், அவை எல்லாம்
- எல்லாம் என்னும் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று
அவர்தாம், அவைதாம்
- தாம் என்னும் பெயர் இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று.
அவன்தான், அவள்தான், அதுதான்
- தான் என்பது இருதிணை ஒருமை மூன்றினுக்கும் பொதுவாயிற்று

## தன்மை முன்னிலைப் படர்க்கைப் பெயர்கள்

**285. தன்மை யான் நான் யாம் நாம் ; முன்னிலை**
**எல்லீர் நீயிர் நீவிர் நீர்நீ;**
**அல்லன படர்க்கை ; எல்லாம் எனல்பொது**

**கருத்துரை:**

✷தன்மைப் பெயர்கள், யான், நான், யாம், நாம் என்னும் நான்குமாம். முன்னிலைப் பெயர்கள் எல்லீர், நீவிர், நீ என்னும் ஐந்துமாம். ஒவ்வொன்பதும் அல்லாத பெயர்கள் படர்க்கைக் குரியனவாம்.

✷ அவற்றுள்,'எல்லாம்' என்னும் பெயர் மட்டும் மூவிடத்திலும் உரியதாகும்

**விளக்கவுரை:**

✷**(எ.கா) யாம் எல்லாம் நீர் எல்லாம்**
**அவர் எல்லாம், அவையெல்லாம்** - எல்லாம் என்னும் பொதுப்பெயர் மூவிடத்திலும் வந்தது

## தொழிற் பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் இடம் வகுத்தல்

**286. வினையின் பெயரே படர்க்கை ; வினையா**
**லணையும் பெயரே யாண்டும் ஆகும்**

FUTURE VISION STUDY CENTRE

**கருத்துரை:**

- ✷ தொழிற் பெயர்கள் படர்க்கை இடம் ஒன்றிற்கே உரியன. வினையாலணையும் பெயர்கள் தனித்தனி மூவிடத்திற்கும் உரியன.

**விளக்கவுரை:**

**✷வினைப்பெயர்= தொழிற்பெயர்**

(எ-டு) : உணல் நன்று, தினல் நன்று, வருகை நன்று தொழிற்பெயர்கள் படர்க்கை இடத்திற்கே உரிமையாய் வந்தன.

வந்தேனை, வந்தாயை, வந்தானை

- வினையாலணையும், பெயர்கள் மூன்றிடத்திலும் வந்தன

# தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேற்றுமை

- ✷ தொழிற்பெயர் தொழிலை உணர்த்தும் ; படர்க்கை இடத்திற்கும் உரியதாய் வரும்
- ✷ வினையாலணையும் பெயர் தன் தொழிலை உடைய பொருளை உணர்த்தும் ; மூவிடங்களுக்கும் உரியதாய் வரும்.

# பன்னிரண்டு பொதுப் பெயர்கள்

**287. தான் யான் நான் நீ ஒருமை ; பன்மைதாம்**
**யாம் நாம் எலாம்எலீர் நீயிர்நீர் நீவிர்.**

**கருத்துரை:**

- ✷ தான், யான், நான், நீ என்னும் நான்கும் இருதிணை முக்கூற்று ஒருமைப் பெயர்களாகும். தாம், யாம், நாம், எலாம், எலீர், நீயிர், நீர், நீவி என்னும் எட்டும் இருதிணை இருவினைக்கூற்றுப் பன்மை பெயர்கள்.

**விளக்கவுரை:**

- ✷ இருதிணை முக்கூற்று ஒருமை = உயர்திணை ஆண்பால், பெண்பால், அ∴றிணை ஒன்றன்பால்
- ✷ இருதிணை இருகூற்றுப் பன்மை = உயர்திணைப் பலர்பால் அ∴றிணை பலவின்பால்

# எண்ணால் வரும் உயர்திணைப் பெயருக்குப் புறனடை

**288. ஒருவன் ஒருத்திப் பெயர்மேல் எண்ணில**

**கருத்துரை:**

- ✷ ஒன்று என்னும் எண்ணை அடிப்படையாகக் கொண்டு ஒருவன், ஒருத்தி என்ற பெயர்கள் தோன்றுமேயன்றி, ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு முதலிய எண்களின் அடியாக ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும் தோன்றின.

**விளக்கவுரை:**

✷ ஒருவன், ஒருத்தி என்று வருவதைப்போல இருவன், இருத்தி ; மூவன் , மூத்தி என ஆண்பால் பெண்பால் பெயர்கள் வாரா

ஆனால், இருவர், மூவர் என வரும்

**289. ஒருவர் என்பது உயர்இரு பாற்றாய்ப்**
**பன்மை வினைகொளும் பாங்கிற்று என்ப**

**கருத்துரை:**

- ✷ ஒருவர் என்னும் சொல் உயர்திணை ஆண்பால், பெண்பால் என்ற இருபார்க்கும் பொதுவாய் உயர்திணைப் பலர்பால் வினையைக் கொண்டு முடியும்.

**விளக்கவுரை:**

- ✷ **(எ-டு) ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்.**
  **பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார்**

FUTURE VISION STUDY CENTRE

✸ இங்கு, பகுதிக்கேற்ப நிற்பான், நிற்பாள் என ஒருமை வினை கொள்ளாமல், விகுதிக்கேற்ப 'நிற்பார்' என்ற பன்மை வினை கொண்டமை காண்க.

✸ ஆயினும், பன்மைவினை என்றது சொல்லளவேயன்றிப் பொருள் அளவால் ஒருமை வினையே என உணர்க

✸'உரையிற் கோடல்' என்னும் உத்தியால், உயர்வு காரணமாக 'ஆர்' என்னும் இடைச்சொல்லை ஈற்றில் பெற்றுள்ள இருதிணைப் பொதுப்பெயரும், பால்பகா அ.்.றிணைப் பெயரும், சிறுபான்மை உயர்திணைப் பெயரும் பன்மைச் சொல் கொண்டு முடியும்.

**(எ-டு) சாத்தனார் வந்தார், முடவனார் வந்தார்**
**முடக்கொற்றார் வந்தார், தந்தையார் வந்தார்**

✸ இருதிணைப் பொதுப்பெயர்கள் பன்மைச் சொல் கொண்டு முடிந்தன
நரியார் வந்தார்
✸ பால்பகா அ.்.றிணைப் பெயர், பன்மைச் சொல் கொண்டு முடிந்தது
✸ நம்பியார் வந்தார். நங்கையார் வந்தார், இறையனார் வந்தார்
✸ உயர்திணைப் பெயர்கள் பன்மைச் சொல் கொண்டு முடிந்தன

# ஆகுபெயர்

**290. பொருள்முதல் ஆறோடு அளவைசொல் தானி**
**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**
**ஒன்றன் பெயரான் அதற்குஇணை பிறிதைத்**
**தொன்முறை உரைப்பன ஆகு பெயரே.**

**கருத்துரை:**

✸ பொருள், இடம், காலம் சினை குணம் தொழில் எனும் ஆறுடன், எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகை அளவையும், சொல்லும் தானியும், காரணமும், காரியமும், கருத்தாவும் ஆகிய இவை முதலாக வரும் பொருள்களுள்.
✸ ஒரு பொருளினது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகிவருவது ஆகுபெயர் எனப்படும்.

**விளக்கவுரை:**

✸ ஆக்க ஆகும் பெயர் ஆகுபெயர் என்க

1. பொருளாகுபெயர்:

(எ-டு). தாமரை புரையும் காமர் சேவடி
தாமரை என்னும் முதற் பொருளின் பெயர் அதன் சினைப் பொருளாகிய மலருக்கு ஆகி வந்தது

2. இடவாகுபெயர்:

"அகனமர்ந்து செய்யாள் உறையும்"
- அகம் என்னும் இடப்பெயர் அங்குள்ள மனத்திற்கு ஆயிற்று

3. காலவாகுபெயர்:

கார் அறுத்தான்
- கார் என்னும் மழைக் காலத்தின் பெயர் அதன்கண் விளையும் நெற்பயிருக்கு ஆயிற்று

4. சினையாகுபெயர்:

வெற்றிலை நட்டான்
- வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்தது

5. குணவாகு பெயர்:

நீலம் சூடினாள்
- நீலம் என்னும் நிறப்பண்பின் பெயர் அதனை உடைய குவளை மலருக்கு ஆயிற்று. குணம் = பண்பு. குணவாகு பெயரைப் பண்பாகு பெயர் எனவும் வழங்குவர்.

FUTURE VISION STUDY CENTRE

6. தொழிலாகுபெயர்:

வற்றலோடு உண்டான்
- வற்றல் என்னும் தொழிற்பெயர் அதனை உடைய உணவுப்பொருளுக்கு ஆயிற்று

7. எண்ணல் அளவை யாகுபெயர்:

கால் வலித்தது
- கால் என்னும் எண்ணலளவைப் பெயர் அவ்வளவினை உடைய உறுப்பிற்கு ஆயிற்று

8. எடுத்தலளவை யாகுயெபர்

இரண்டு வீசை கொடு:
- வீசை என்னும் எடுத்தல் (நிறுத்தல்) அளவைப்பெயர் அவ்வளவை உடைய பொருளுக்கு ஆகியது

9. முகத்தலளவை யாகுபெயர்:

நாழி உடைந்தது
- நாழி என்னும் முகத்தலளவைப் பெயர், அவ்வளவை உடைய பொருளுக்கு (கருவிக்கு) ஆயிற்று.

10. நீட்டலளவை யாகுபெயர்:

உடுப்பது நான்கு முழம்
- முழம் என்னும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவை உடைய பொருளுக்கு (துணிக்கு) ஆகியது

11. சொல்லாகு பெயர்:

இந்நூலுக்கு உரை செய்தான்
- உரை என்னும் சொல்லின் பெயர், அதனால் உணர்த்தப்படும் பொருளுக்கு ஆயிற்று

12. தானியாகு பெயர்:

விளக்கு முரிந்தது.

விளக்கு என்னும் தானியின் பெயர், அதன் தானமாகிய தண்டிற்கு ஆயிற்று.
தானம் - இடம் ; தானி - இடத்திலுள்ள பொருள்

13. கருவியாகு பெயர்:

திருவாசகம் பாடினான்.
- அடையடுத்த 'வாசகம்' என்னும் கருவி (காரணம்) யின் பெயர் அதன் காரியமான நூலுக்கு ஆயிற்று

14. காரிய ஆகுபெயர்:

இந்நூல் அணி
- அணி என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துவதற்குக் கருவியாகிய இலக்கண நூலுக்கு ஆகியது

15. கருத்தா ஆகுபெயர்:

திருவள்ளுவரைப் படி
- திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆயிற்று. இன்னும் இவ்வாகுபெயர், விடாத ஆகுபெயர், விட்டவாகுபெயர், இருமடி யாகுபெயர் மும்மடி ஆகுபெயர், அடையடுத்தவாகுபெயர், இருபெயரொட்டாகுபெயர் எனவும் பெயர் பெற்று வழங்கும்.

16. விடாத ஆகுபெயர்:

புளி தின்றான்

- புளி என்பது, சுவையாகிய தன் பொருளைவிடாது நின்று அதனின் வேறல்லாத கனியை உணர்த்துவதால் விடாத ஆகுபெயர் எனப்பட்டது.

17. விட்ட வாகுபெயர்:

அவ்வூர் வந்துத

FUTURE VISION STUDY CENTRE

# MATERIAL தேவைக்கு

**TNPSC: GR –I & II (P), GR –IV**

**(TAMIL & ENGLISH MEDIUM),**

**PG: TRB - TAMIL, ENGLISH,**

**MATHS & COMPUTER SCIENCE**

**TET (P1 & P2),**

**CONTACT -90420 30163**

*******************************************************

**FUTURE VISION STUDY CENTRE**

**2ND FLOOR, AVK MARUTHI PLAZA,**

**OPP. HOTEL LAKSHMI PRAKASH,**

**SKS HOSPITAL ROAD,**

**SALEM – 636 004**